## உருளைக்கிழங்கு விலை நிலையாக இருக்கும்

வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் மூன்றாம் முன்கூட்டு மதிப்பீட்டின்படி, 2015-16 ஆண்டு, உருளைக்கிழங்கு இந்தியாவில் 21.34 லட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 437.70 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பஞ்சாப், ஹரியானா, உத்திரபிரதேசம், பீகார், மேற்கு வங்காளம், குஜராத் மற்றும் மத்திய பிரதேசம் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாகும். தமிழ்நாட்டில், நீலகிரி மற்றும் பழனி ஆகிய மலைப்பாங்கான பகுதிகளில் உருளைக்கிழங்கின் சாகுபடி மிகக் குறைவாக உள்ளது. 2014-2015 ல் தமிழ்நாட்டில் உருளைக்கிழங்கு 6000 எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 1.3 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கடைபோக உருளைக்கிழங்கு செப்டம்பர் முதல் அக்டோபர் வரை விதைப்பு செய்து டிசம்பர் மற்றும் ஜனவரி மாதத்தில் அறுவடை செய்யப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் குப்ரி ஜோதி மற்றும் குப்ரி கிரிராஜ் இரகங்கள் பயிரிடப்படுகின்றன.

கர்நாடகத்தில் கோலார், ஹாசன், திம்பம், குஜராத் மற்றும் ஆந்திரப்பிரதேசத்தில் விளையும் உருளைக்கிழங்கு சந்தைக்கு வர தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டில் அக்டோபர்-டிசம்பர் ஆகிய மாதங்களில் உருளைக்கிழங்கின் வரத்து அதிகம் காணப்படும். நீலகிரி மாவட்டத்தில் குறைவான மழை காரணமாகவும், ஹாசன் பகுதியில் உருளை விதைப்பு தள்ளிப் போனதாலும் செப்டம்பர் மாதத்தில் வரத்து குறைந்துள்ளது. ஆதலால் இம்மாதத்தில் உருளைக்கிழங்கிற்கு பற்றாக்குறை வர வாய்ப்புள்ளது. எதிர்வரும் பண்டிகை காலங்களில் (கார்த்திகை மற்றும் மார்கழி) உருளைக்கிழங்கிற்கு தேவை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

சந்தைப் பகுதியில் உருளைக்கிழங்கு சேமிக்க தேவையான வசதிகளை குளிர் பதன கிடங்குகளில் அமைத்துத் தந்தால், உருளைக்கிழங்கு விலை நிலையாக இருக்கும் என வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 19 ஆண்டுகளாக நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் (NCMS) நிலவிய உருளைக்கிழங்கு விலையை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் ஊரக

மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம், ஆய்வு செய்து சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் தரமான உருளைக்கிழங்கு பண்ணை விலை கிலோவிற்கு ரூ. 23-25 இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் மேற்கண்ட விலை முன்னறிவிப்பின்படி, உருளைக்கிழங்கு சாகுபடியை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர்-641 003
தொலைபேசி - 0422-2431405


**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


பேராசிரியர் மற்றும் தலைவர்
தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம்
விஜயநகரம்
உதகமண்டலம் - 643 001
தொலைபேசி 0423- 2442170